309458

DIRECTORATE OF TRIBAL WELFARE
27 SEP 2022
CHEPAUK, CHENNAI-5

| | |
|---|---|
| SUPT | |
| AD | |
| JD | |
| DIR | |

## சுருக்கம்

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலம் – பணியில் இருக்கும்போது காலமான அரசு ஊழியர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணி நியமனம் வழங்குதல் - திரு.கே.இலக்குமிபதி என்பவருக்கு இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் செய்யப்பட்டது - பணியினை வரன்முறை செய்தல் - ஆணை வெளியிடப்படுகிறது.

---

### ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்(ஆதிந-7)துறை

அரசாணை (ப) எண். 181

நாள்: 19.09.2022
சுபகிருது வருடம்,
புரட்டாசி மாதம் 02 ஆம் நாள்,
திருவள்ளுவர் ஆண்டு 2053,

படிக்கப்பட்டது:-

1. அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள்.23.01.2020.
2. பழங்குடியினர் நல இயக்குநர் அவர்களின் கடித ந.கஎண்.பமே/எ2/4848/2022, நாள்.10.06.2022.

**ஆணை:-**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட, பழங்குடியினர் நல இயக்குநரின் கடிதத்தில், திருவண்ணாமலை மாவட்டம், ஆரணி வட்டம், பையூர் அரசு ஆதிதிராவிடர் நல நடுநிலைப் பள்ளியில் தமிழ் பட்டதாரி ஆசிரியராகப் பணிபுரிந்து வந்தபோது 09.01.2003 அன்று காலமான திரு.ஆர்.கேசவன் என்பவரது மகன் திரு.கே.இலக்குமிபதி என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணி நியமனம் வழங்கப்பட்டு, 06.02.2020 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகின்றார் என்றும், அன்னாரது இளநிலை உதவியாளர் பணியினை வரன்முறை செய்து, உரிய ஆணைப் பிறப்பிக்குமாறு அரசைக் கோரியுள்ளார்.

2. மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மேற்காணும் பழங்குடியினர் நல இயக்குநரின் கருத்துரு அரசால் கவனமுடன் பரிசீலனை செய்யப்பட்டது. அதனடிப்படையில், கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளராகப் பணிநியமனம் வழங்கப்பட்டு, பழங்குடியினர் நல இயக்குநரகத்தில் பணிபுரிந்து வரும், திரு.கே.இலக்குமிபதி என்பவர் அப்பணியிடத்திற்கான உடற்தகுதியைப் பெற்றிருக்க வேண்டும் எனும் நிபந்தனைக்குட்பட்டு, அன்னாரது பணியினை அவர் பணியேற்ற நாளான 06.02.2020 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து அரசு ஆணையிடுகிறது. இவ்வாறு பணிவரன்முறை செய்யப்படுவதால் திரு.கே.இலக்குமிபதி, இளநிலை உதவியாளர் என்பவர் ஆண்டு ஊதிய உயர்வு மற்றும் ஊதிய நிலுவைத் தொகை ஆகியவற்றை பெற விதிகளின்படி தகுதியுடையவராகிறார்.

3. இவ்வரசாணை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை மற்றும் மனித வள மேலாண்மைத் துறையின் இசைவினை முறையே அதன் அ.சா. எண். 15663/ட்டி1/2022, நாள்.06.09.2022 மற்றும் அ.சா.எண்.3122435/ ஜி2/ 2022, நாள்.13.09.2022-இல் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

தென்காசி சு ஜவஹர்,
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்-
இயக்குநர், பழங்குடியினர் நலம், சென்னை-5.
இயக்குநர், ஆதி திராவிடர் நலம் , சென்னை-5
திரு.கே.இலக்குமிபதி, இளநிலை உதவியாளர்.
பழங்குடியினர் நல இயக்குநரகம், சென்னை-5.
(பழங்குடியினர் நல இயக்குநர் வழியாக)
மாநில முதன்மைக் கணக்காய்வுத் தலைவர்,
சென்னை - 18 / 35.
சம்பளக் கணக்கு அலுவலர்(கிழக்கு), சென்னை-8
நகல்
தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை, சென்னை-9
மனித வள மேலாண்மைத் துறை, சென்னை - 9.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

19/09/2022

பிரிவு அலுவலர்

19/09/2022